OS 83/2024

வா.சா.1 சிவராஜ் த/பெ ராமன்

நாள் 10.02.2026

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தான் தட்டச்சு செய்தார்கள். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து பார்த்த பிறகு தான் கையொப்பம் செய்தேன் என்றால் ஆமாம். பிரதிவாதி முத்து என்ன தொழில் செய்கிறார் என்றால் தறி தொழில் செய்கிறார். ராட்டிணமங்கலம் கிராமம் இ.பி நகரில் இருந்து சுமார் 5 கி.மீ தூரத்தில் இருக்கும் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் 2வது பத்தியில் 7வது வரியில் ராட்டிணமங்கலம் கிராமத்தில் தாவா பிராமிசரி நோட்டை பிரதிவாதிகள் இருவரும் கூட்டாக எழுதி கொடுத்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். எனது தாவா 8வது பத்தியில் ராட்டிணமங்கலத்தில் பாண்டு எழுதி கொடுத்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் பாண்டில் முத்து மற்றும் சத்தியா கையொப்பம் போட்டதை நான் பார்த்ததாக விவரம் சொல்லவில்லை என்றால் சரிதான் சொல்லவில்லை. என்னுடன் ஒவ்வொரு வாய்தாவிற்கும் கார்த்திகேயன் என்னுடன் நீதிமன்றத்திற்கு வருகிறார் என்றால் இல்லை. கார்த்திகேயன் ஒவ்வொரு வாய்தாவிற்கும் நீதிமன்றத்திற்கு வருகிறார் என்றாலும் வழக்கிற்காக இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை இரண்டு பிரதிவாதிகளும் கையொப்பம் போட்டு வாங்கவில்லை என்றாலும் வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4ல் மணி என்பவர் கையொப்பம் செய்திருக்கிறார் என்றாலும் சரிதான். மணி 1ம் பிரதிவாதியின் தகப்பனார் என்றால் சரிதான். 2019 வருடத்திற்கு முன்பே 1ம் பிரதிவாதிக்கு தொழிலில் நஷ்டம் ஏற்பட்டு 1ம் பிரதிவாதியின் தகப்பனாருடன் குடும்ப சண்டை ஏற்பட்டு 1ம் பிரதிவாதி வேலூருக்கு பிழைப்பிற்காக சென்றுவிட்டார் என்றால் நான் கடன் கொடுத்த பிறகு தான் சென்றார். அதனால் தான் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டு 1ம் பிரதிவாதிக்கு தெரிவிக்கவில்லை என்றாலும் அதனால் 1ம் பிரதிவாதியால் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு என்னை யார் என்றே தெரியாது என்றாலும் என்னை பார்த்ததே கிடையாது என்றாலும் சரியல்ல. 10.04.2022ல் பிரதிவாதிகள் கடன் வாங்கிக்கொண்டு தாவா கடனுறுதி சீட்டை எழுதி கொடுத்ததாக கூறியிருப்பது தவறு என்றால் சரியல்ல.

3. பிரதிவாதிகள் இ.பி நகரில் வசிக்கிறார்கள் என்றாலும் இராட்டிணமங்கலத்தில் கடனுறுதி சீட்டு எழுதி கொடுத்ததாக பொய்யாக சொல்லியிருக்கிறேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் இருவரும் பட்டதாரிகள் என்றாலும் உண்மையில் கடன் வாங்கியிருந்தால் பிரதிவாதிகளே கைப்பட பாண்டை எழுதி கைபொப்பம் செய்திருப்பார்கள் என்றாலும் சரியல்ல. தினக்கூலி வேலை செய்யும் எனக்கு தாவா கடன் தொகையை கொடுப்பதற்கான போதிய வசதி வாய்ப்பு உள்ளது என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேன். பொதுவாக கடன் வாங்குபவர்கள் கடன் கொடுப்பவரின் இடத்திற்கு வந்து தான் பணம் வாங்குவார்கள் என்றாலும் நான் பிரதிவாதிகள் இடத்திற்கு சென்று கடன் கொடுத்ததாக கூறியிருப்பது பொய்யான சங்கதி என்றால் சரியல்ல.

4. கார்த்திகேயன் என்பவர் பதிவு செய்யப்படாத சீட்டு ஒன்றை நடத்தி வந்தார் என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் அவரிடம் ரூ.5லட்சம் மற்றும் ரூ.10லட்சம் சீட்டை எடுத்து சீட்டு முழுவதும் கட்டிவிட்டார்கள் என்றால் தெரியாது. சீட்டு எடுத்ததற்காக பிரதிவாதிகள் தேதி மட்டும் போட்டு வெற்று பிரிண்டட் பாண்டில் பிரதிவாதிகள் கையொப்பம் போட்டு கார்த்திகேயனிடம் பொறுப்பிற்காக கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. 2018ம் ஆண்டிற்கு முன்னர் சீட்டு முழுவதும் கட்டி பைசல் செய்து விட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. கடைசி சீட்டு கட்டுவது வறுமையால் காலதாமதம் ஏற்பட்டதால் கார்த்திகேயன் பிரதிவாதிகளிடம் வட்டி கேட்டு பிரச்சனை செய்தார் என்றால் தெரியாது. விரோதம் காரணமாக பிரதிவாதிகள் அளித்த காலாவதியான கடனுறுதி சீட்டை கார்த்திகேயனை பிரதிவாதிகளின் கையொப்பம் செய்து அவரிடம் இருந்த இருப்பு சாட்சிகளை கொண்டு சாட்சிகளிடம் கையொப்பம் செய்து தாவா போர்ஜெரி பாண்டை வாதி ஆகிய என்னை கருவியாக பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரியல்ல. கார்த்திகேயனும் நானும் தலா ஒரு போர்ஜெரி வழக்கை தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல.

5. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையை மறுத்து கூறியிருக்கிறேன் ஆனால் கார்த்திகேயனை தெரியாது என்று விவரம் கூறவில்லை என்றால் கூறியிருக்கிறேன். இந்த வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை என்பதால் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. தாவா கடனுக்கும் பிரதிவாதிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.